முருகப்பெருமான் துணை

**மகான் தூர்வாசமுனிவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.05.2022**, புதன்கிழமை

1. பரமானந்த சதாசிவ ஞான
பாலதண்டாயுத மகா சூட்சும
அறமாக வந்த அரங்கனே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தகர் திங்கள்
குறைவிலா மூவேழு திகதி புந்தி வாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 21ம் நாள், 04.05.2022 புதன்கிழமை)
பெருமைபட அருளாசி தன்னை
புகலுவேன் தூர்வாசமுனிவர் யானும்
3. யானும் உலகோர் பண்புறஉரைப்பேன்
ஊழதால் பல பிறவி கண்டு
ஞானமிலா மாயை வழிதனில்
நன்மைதருமென உழன்று துன்புறும் மானிடா
4. மானிடா மும்மலக் குற்றம்
மாச்சர்ய செயலை விட்டு
இனியேனும் பிறவாது இருக்க
என் சொல் கேட்டு வருவாயப்பா
5. அப்பனே மனிதப் பிறவிஅரிது
அதில் பொறிகள் பழுதின்றி
காப்பாக செனிப்பது அரிது
கருணைமிக்க இறைபலம் உலகில்
6. உலகில் நல்படைப்பு தருகவே
உணராது தீதான வழியில்
கலகம் பேராசை வஞ்சமென
கரும இந்திரியங்களில் மாட்டி
7. மாட்டியே பாவம்பல செய்து
மாதவ பலம் அறியா மானிடா
வாட்டமிலா வாழ்வை பெற
வந்த நோக்கம் நீ அறிய
8. அறியவே ஆறுமுகன் அம்சமாக
அரங்கமகா ஞானியரின்
அறிவுரை உபதேசமாக வரும்
ஆன்மீக ஞான வழிகளை ஏற்று
9. ஏற்றுத் தொடர்ந்து வர
இணையிலா ஞானிகள் பேரில்
ஆற்றல்தரும் பூசை செய்து
அன்னதான சேவை வழி

10. வழிதனில் பொருளுதவி செய்து
வணங்கித் தருமமும் புரிய
அழியாமை எனும் சூட்சுமம்
அறிவுக்கு எட்டி இனிதே

11. இனிதே அரங்கன் தயவில்
இனி பிறவாப் பேற்றை
துணிவுபட அடைய நேரும்
தூர்வாசமுனிவர் என் அருளாசி முற்றே

–சுபம்–